Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register CC. 288/2016
Sessions prosecution
depositions of witness for Pw7 Chief and Cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.45 Pm – 2.10 pm |
| Name | : | திரு. மாதேவன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24th day of February 2026.
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )
சாட்சி மனுவின் பேரில அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உத்தன்ப்பள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நிலையத்தில் நிலுவையில் இருந்து வரும் CC.No. 288/2016 வழக்கு விவரங்கள் கோப்புகள் அடிப்படையில் எனக்கு தெரியும். எனவே நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.02.2013-ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மனோகரன் நிலைய பொறுப்பில் இருந்த போது சின்ன சென்னரயப்பா மகன்

பெரியசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 19/2013, இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட காவல் ஆய்வாளர் புவனேஸ்வரி அவர்கள் 25.02.2013–ம் தேதி 7.00 மணிக்கு தொட்டமெட்டரை கிராமம் அருகே ஓசூர் ராயக்கோட்டை சாலையில் அமைந்த சம்பவயிடத்தை சாட்சிகள் கிருஷ்ணா மற்றும் மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது .**

2) இவ்வழக்கில் இறந்த உண்ணாமலையம்மாள் என்பவரது உடலின் மீது ஓசூர் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் பெரியசாமி, அரியப்பன், பஞ்சாயத்தார் சாட்சிகள் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் தொடர்புடைய வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கைகளை பெற்றார். **பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் செந்தில் என்பவரை விசாரித்து பெறப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.8 குறியீடு செய்யப்படுகிறது.** 27.02.2013–ம் தேதி 12.30 மணிக்கு நிலைய முன்பு ஆஜரான எதிரியை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தார். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மனோகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கையை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் ஜீப்பரா கிராசிங் கோடுகள் இல்லை என்றால் சரிதான். ஒசூர்–ராயக்கோட்டை ரோடு குறுகிய ரோடு என்றால் சரிதான். சம்பவயிடத்தில் புளியமரம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அரசாங்கத்திற்கு சொந்தமானது. இறந்து போன நபருக்கு 65 வயது இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் மகஜர் சாட்சிகளை தான் கண்ணுற்ற சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. மகஜர் சாட்சிகள் இருவரும் இறந்து போனவரின் பேரன்கள் என்றும் வேறு சாட்சிகள் யாரும் இல்லாதததால் பேரன்களை மகஜர் சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாட்டியம்மாவுக்கு சரியாக கண் தெரியாது , காது கேட்காது என்றும், மரத்திலிருந்து விழுந்த புளியங்காய் எடுப்பதற்காக பேருந்து வருவதை கவனிக்காமல் திடீரென்று குறுக்கே சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் எதிரியின் வேகம் மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் கண்ணுற்ற சாட்சிகள் புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. இறந்தவருக்கு இழப்பீடு வாங்கி கொடுப்பதற்காக எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் உதவி ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து விட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.